**மாநில தேர்தல் ஆணையம்**
3வது தளம், தேர்தல் துறை அலுவலக வளாகம், லாஸ் தோட்டம், வில்லியனூர் மெயின் ரோடு, ரெட்டியார்பாளையம், புதுச்சேரி 605 010. தொலைபேசி : 0413 – 2291118, 2291028.
**Website : https://sec.py.gov.in** **Email ID : secpdy.pon@nic.in**

புதுச்சேரி, தேதி 15-06-2022

# செய்திக் குறிப்பு

புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையரின் வழிகாட்டுதல் படி கடந்த, 01-01-2022 முதல் 07-01-2022 வரை வரைவு வாக்காளர் பட்டியலானது, புதுச்சேரியின் அனைத்து வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்கள் மற்றும் துணை அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது. மேலும், சேர்த்தல், ஆட்சேபணை, நீக்குதல், திருத்துதல் மற்றும் இடமாற்றம் செய்தல் ஆகியன தகுதியுள்ள வாக்காளர்களிடமிருந்து 01-01-2022-ஐ தகுதிபெறும் நாளாகக் கொண்டு கோரப்பட்டன. இவ்வாறாகப் பெறப்பட்ட படிவங்கள் ஆய்வு செய்யப்பட்டு வாக்காளர் பதிவு அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டன.

மாநில தேர்தல் ஆணையத்தினால் வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 05-01-2022 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிட்டப்பட்ட வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மேம்பாடு செய்யப்பட்டது.

தற்போது இறுதி வாக்காளர் பட்டியலானது, புதுச்சேரி, மாநில தேர்தல் ஆணையத்தின், இணையதளமான https://sec.py.gov.in/ –ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது

அ) இவ்வாக்காளர் பட்டியலின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு தரப்படுகிறது :-

| வட்டாரம் | மொத்த வாக்காளர்கள் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மற்றவை |
|---|---|---|---|---|
| புதுச்சேரி | 7,78,663 | 3,67,304 | 4,11,260 | 99 |
| காரைக்கால் | 1,61,902 | 74,832 | 87,049 | 21 |
| மாஹே | 31,451 | 14,386 | 17,065 | -- |
| ஏனாம் | 38,577 | 18,631 | 19,946 | -- |
| **மொத்தம்** | **10,10,593** | **4,75,153** | **5,35,320** | **120** |

எனவே, இதன் மூலம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்று அறியப்படுகிறது.

ஆ) புதுச்சேரி பகுதியில் உள்ள 2 நகராட்சிகளில், உழவர்கரை நகராட்சியில், அதிகபட்சமாக 2,49,181 வாக்காளர்கள் உள்ளனர்.

...2-

இ) புதுச்சேரிப் பகுதியில் உள்ள 5 கொம்யூன் பஞ்சாயத்துகளில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தில் அதிகபட்சமாக 1,08,933 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக நெட்டப்பாக்கம் கொம்யூன் பஞ்சாயத்தில் 41,291 வாக்காளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

ஈ) காரைக்கால் பகுதியில் உள்ள ஒரே நகராட்சியில் 70,872 வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர். மேலும் காரைக்கால் பகுதியில் உள்ள 5 கொம்யூன் பஞ்சாயத்துகளில் திருநள்ளார் கொம்யூன் பஞ்சாயத்தில் அதிகபட்சமாக 31,642 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக நிரவி கொம்யூன் பஞ்சாயத்தில் 10,224 வாக்காளர்களும் இடம்பெற்றுள்ளனர்.

சமீபத்தில் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், பொதுநல வழக்கு எண் 278 / 2022-ல் (சுரேஷ் மஹாஜன் *Vs.* மத்திய பிரதேச அரசு மற்றும் பிறர்) வழங்கிய தீர்ப்பில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநில தேர்தல் ஆணையங்களுக்கும் உள்ளாட்சி தேர்தலை நடத்த அறிவுறுத்தியுள்ளது. இத்தீர்ப்பானது, புதுச்சேரி மாநில தேர்தல் ஆணையத்தின் இணையதளமான https://sec.py.gov.in/ –ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் புதுச்சேரி மாநில பொது மக்களுக்கும் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மாநில தேர்தல் ஆணையர்**